இப்பிரசுரம் சமூக சேவைகள் திணைக்களத்தின் (DoCS) இணையதளம் **www.community.nsw.gov.au** இல் பின்வரும் மொழிகளில் கிடைக்கக்கூடியதாக உள்ளது.

அரபு
சீன மொழி
குரோஷியன்
தாரி
டின்கா
பாரசீகம்
பிஜியன்
கொரியன்
மஸடோனியன்
ரஷ்யன்
சமோவன்
சோமாலி
ஸ்பனிஷ்
தமிழ்
டொங்கன்
துருக்கி
வியட்னாம்

ஒரு பிள்ளை அல்லது இளம் வயதினர் துஷ்பிரயோகத்திற்கு அல்லது புறக்கணிப்புக்கு உட்படக்கூடிய ஆபத்தில் இருப்பின், அதுபற்றி முறையிட DoCS இன் உதவி இணைப்பை 132 111 இல் தொடர்பு கொள்ளவும்.

TTY (02) 9633 7698

இப்பிரசுரத்திலுள்ள புகைப்படங்களில் தோன்றுபவர்கள் மாதிரிகள் மட்டுமேயன்றி அவர்கள் வீட்டு வன்முறைக்கோ, துஷ்பிரயோகத்திற்கோ அல்லது புறக்கணிப்புக்கோ உட்பட்டு பராமரிப்பை வேண்டி நிற்பவர்கள் அல்லர்.

NSW Department of Community Services
4 - 6 Cavill Avenue
Ashfield NSW 2131
(02) 9716 2222
www.community.nsw.gov.au

ISBN 0 7310 4323 5
SEPTEMBER 2006

Tamil



சிறுவர் துஷ்பிரயோகம், புறக்கணிப்பு என்பவற்றைத் தவிர்த்தல்

Spot it. Help stop it: preventing child abuse and neglect

# அதனை அடையாளம் காண்பீர். அதனை நிறுத்த உதவுவீர்.



# சிறுவர் துஷ்பிரயோகமும் புறக்கணிப்பும் பற்றியது

சகல சிறுவர்களும் வன்முறை மற்றும் துஷ்பிரயோகமற்ற வாழ்வைப் பெற உரிமையுடையவர்கள்.

துரதிஷ்டவசமாக அவுஸ்திரேலியா முழுவதிலும் சிறுவர் துஷ்பிரயோகமும், புறக்கணிப்பும் முக்கிய ஒரு விடயமாக தொடர்ந்து இருந்து வருகிறது.

ஒரு பிள்ளை துஷ்பிரயோகத்திற்கு அல்லது புறக்கணிப்புக்கு உட்படக்கூடிய ஆபத்தில் இருப்பின், அதுபற்றி புகார் செய்வதற்கு DoCS இன் உதவி இணைப்பை 132 111 இல் தொடர்பு கொள்ளவும்.

சிறுவர் துஷ்பிரயோகமும், புறக்கணிப்பும் பலவீனமூட்டக்கூடிய பாதிப்புகளை சிறுவர்களுக்கு மட்டுமன்றி அவர்களது குடும்பங்களுக்கும், சமூகங்களுக்கும் ஏற்படுத்துகின்றன.

சிறுவர் துஷ்பிரயோகமும், புறக்கணிப்பும் எந்தவொரு பிள்ளைக்கும் அல்லது இளம் பருவத்தினருக்கும் எந்தக் குடும்பத்திலும் நிகழக்கூடும். அது தீங்களிக்கக்கூடியது மட்டுமன்றி நிலைத்து நிற்கக்கூடிய, பாதிப்பேற்படுத்தக்கூடிய விளைவுகளையும் ஏற்படுத்தும்.

சிறுவர் துஷ்பிரயோகத்திற்கும், புறக்கணிப்புக்கும் உட்படக்கூடிய சிறுவர்கள், மகிழ்ச்சியற்றவர்களாகவும், கோப உணர்ச்சி கொண்டவர்களாகவும், மிகக் குறைந்த சுய கௌரவம் உடையவர்களாகவும் மாறுவர். சில சிறுவர்கள் துஷ்பிரயோகம் காரணமாக இறக்கவும் கூடும்.

சிறுவர்கள் பின்வரும் காரணங்களால் சிலவேளை புண்படுத்தப்படுவர், அல்லது தீங்கிழைக்கப்படக்கூடிய ஆபத்தில் இருப்பர்:

- அவர்களது குடும்பங்கள் போதிய ஆதரவைப் பெறாதிருத்தல
- அவர்களது பராமரிப்பாளர்கள் தொழிலின்மை, நோய், தனிமை அல்லது ஒதுக்கப்பட்ட நிலை போன்றவற்றால் ஏற்படக்கூடிய மன அழுத்தங்களுக்கு உட்பட்டிருத்தல்
- அவர்களது பெற்றோர்கள், சிறந்த பெற்றோர் பராமரிப்பை அவர்களது பெற்றோரிடமிருந்து பெறாதவர்களாக இருத்தல்.

சிறுவர் துஷ்பிரயோகமும், புறக்கணிப்பும் தவிர்க்கப்படக்கூடியதே.



# சிறுவர் துஷ்பிரயோகம் என்பது யாது?

சிறுவர் துஷ்பிரயோகம் பல வகைப்படும். அவை புறக்கணிப்பு, உடலியல், உணர்ச்சிரீதியான மற்றும் பாலியல் ரீதியிலான துஷ்பிரயோகம் என்பவற்றை உள்ளடக்கும்.

**புறக்கணிப்பு** என்பது பெற்றோரினால் அல்லது பராமரிப்பாளர்களால் ஒரு பிள்ளையின் சிறந்த வளர்ச்சிக்கும், விருத்திக்கும் தேவையான உணவு, உடை, தங்குமிடம், மருத்துவம், பற்பராமரிப்பு மற்றும் போதிய கண்காணிப்பு போன்ற அடிப்படைத் தேவைகளை வழங்குவதில் காட்டப்படும் தொடர்ச்சியான அலட்சியத்தைக் குறிக்கும்.

**உடலியல் துஷ்பிரயோகம்** என்பது பெற்றோர், பராமரிப்பாளரினால் அல்லது வேறொருவரினால் தற்செயலாகவன்றி விளைவிக்கப்படும் தீங்குகளை அல்லது அவற்றை காட்டக்கூடிய சான்றினைக் குறிக்கும். இவை அளவுக்கதிகமான கண்டிப்பால் ஏற்படக்கூடிய தீங்குகள், கடுமையாக அடித்தல் அல்லது குலுக்குதல், ஊமைக்காயமேற்படுத்தல், இரத்தக்காயம், பலமான அடி, தீக்காயம், எலும்பு முறிவுகள் அல்லது எலும்பு விலகல்கள், குரல் வளையை நெரிப்பதற்காக முயற்சித்தல் மற்றும் பெண் பாலுறுப்புகளைச் சிதைத்தல் போன்றவற்றை உள்ளடக்கும். சில வேளை, இக்காயங்கள் உயிராபத்தை விளைவிக்கக்கூடியன.

**உணர்ச்சிரீதியான துஷ்பிரயோகம்** என்பது ஒரு பெற்றோரின் அல்லது பராமரிப்பாளரின் நடத்தை ஒரு பிள்ளையில் தன்நம்பிக்கையை இல்லாதொழித்து அதன் விளைவாக பெருமளவு உளவியல் குழப்பத்திற்கும் அல்லது மன அதிர்ச்சிக்கும் அப்பிள்ளை உட்படுதலைக் குறிக்கும். இது, மிதமிஞ்சிய குறைகாணல், அன்பு காட்டாமை, வீட்டு வன்முறையைக் காணுதல், பயமுறுத்தல் அல்லது அச்சுறுத்தக்கூடிய நடத்தை போன்ற பல்வேறு வகையான நடத்தைகளை உள்ளடக்கும்.

**பாலியல் துஷ்பிரயோகம்** என்பது வயதில் கூடிய அல்லது மூத்தவரான ஒரு வயது வந்தவர் தனது அதிகாரத்தின் மூலம் அல்லது பிள்ளையின் மீதான தனது நம்பிக்கைப் பொறுப்பை பயன்படுத்தி அப்பிள்ளையைப் பாலியல் நடவடிக்கைக்கு உட்படுத்துவதாகும். அநேக வேளைகளில் பிள்ளைகளுக்கு இலஞ்சம் வழங்கியோ அல்லது உடல் ரீதியாகவோ உளரீதியாகவோ அச்சுறுத்தி இந்நடவடிக்கையில் ஈடுபட வைக்கப்படுகின்றனர்.

சிறுவர் துஷ்பிரயோகமும், புறக்கணிப்பும் குற்றச் செயல்களாகும்.



## நான் என்ன செய்யலாம்?

சிறுவர்களும் இளம் பருவத்தினரும் தமது சொந்த வீடுகளிலும், சமூகத்திலும் பாதுகாப்பாக இருப்பதற்கு உரிமை பெற்றுள்ளனர்.

சிறுவர்களையும், இளம் பருவத்தினரையும் தீங்குகளிலிருந்து பாதுகாப்பது ஒவ்வொருவரதும் கடமையாகும். பொறுப்புள்ள வயது வந்தவர்கள், சிறுவர்களதும், இளம் பருவத்தினரதும் சார்பாக நடவடிக்கைகள் மேற்கொண்டால் மட்டுமே அவர்கள் துஷ்பிரயோகம், புறக்கணிப்பு என்பவற்றிலிருந்து பாதுகாக்கப்பட முடியும்.

ஒரு பிள்ளையின் அல்லது ஒரு இளம்பிராயத்தவரது பாதுகாப்பு அல்லது நலன் பற்றிய உங்கள் கரிசனையை முறைப்பாடு செய்வதே துஷ்பிரயோகத்தைத் தவிர்க்கவும் அல்லது தடுக்கவும் அத்துடன் மேலதிக பாதிப்பிலிருந்து அச் சிறுவர்களைப் பாதுகாப்பதற்குமுரிய முதல் படியாகும். இது சிறுவர் அல்லது இளம்பிராயத்தவர் துஷ்பிரயோகத்திற்கு உட்படக்கூடிய ஆபத்திலுள்ள குடும்பங்களுக்கு உதவுவதற்கான வாய்ப்பை NSW சமூக சேவைகள் திணைக்களத்திற்கு (DoCS) வழங்குகின்றது.

## சிறுவர் துஷ்பிரயோகம், புறக்கணிப்பு பற்றி நான் எவ்வாறு முறைப்பாடு செய்வது?

ஒரு பிள்ளை அல்லது இளம்பருவத்தினர் புறக்கணிக்கப்படுவதாக அல்லது உடல், பாலியல் ரீதியாக அல்லது உளரீதியாக துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுவதாக நீங்கள் கருதினால், நீங்கள் உடனடியாக அதுபற்றி DoCS ற்கு புகார் செய்ய வேண்டும். சிறுவர் துஷ்பிரயோகம், புறக்கணிப்பு நிகழ்வதைக் காட்டப் போதுமான அடையாளங்கள் இச்சிறு நூலின் இறுதிப் பகுதியில் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

DoCS இன் உதவி இணைப்பை 132 111 என்ற இலக்கத்தில் ஓர் உள்ளூர் அழைப்பிற்கான செலவில், வாரத்தில் 7 நாட்களிலும் 24 மணி நேரத்தில் எவ்வேளையிலும் தொடர்பு கொண்டு நீங்கள் புகார் செய்யலாம். (TTY 02 9633 7698)

உங்கள் புகார் மிகவும் இரகசியமானது. துஷ்பிரயோகம் அல்லது புறக்கணிப்பு பற்றி எமக்கு புகார் செய்தவர் யார் என்பதை நாம் எவருக்கும் சொல்ல மாட்டோம். அத்துடன் நீங்கள் விரும்பாவிட்டால் உங்கள் பெயரை எங்களுக்கு சொல்ல வேண்டிய கட்டாயமில்லை.

DoCS இன் உதவி இணைப்பு

132 111



# DoCS இன் பணி என்ன?

சட்டத்தின்படி, சிறுவர் துஷ்பிரயோகம், புறக்கணிப்பு பற்றிய புகார்களை அல்லது தீங்கிற்கு உட்படக்கூடிய ஆபத்திலுள்ள சிறுவர்கள் பற்றிய புகார்களை நாம் மதிப்பீடு செய்ய வேண்டும்.

நீங்கள் எம்மைத் தொடர்பு கொள்ளும்போது எமது அலுவலர்கள், சம்பந்தப்பட்ட சிறுவர் அல்லது சிறுவர்களுக்கு ஏற்படக்கூடிய தீங்கின் பாதிப்பு பற்றி அறிய எமக்கு உதவும் வகையில் மேலும் தகவல்களை உங்களிடம் கேட்பார்கள்.

நாம் குறித்த பிள்ளையின் குடும்பத்தாருடன் பேசக்கூடும். குறித்த குடும்பத்தின் சூழ்நிலைகள் பற்றி அறிந்துகொள்வதற்காக வேறு சிலரிடமும் நாம் பேசக்கூடும்.

உதாரணமாக, பிள்ளையின் ஆசிரியரை அல்லது சிறுவர் நலப் பணியாளரை அல்லது உறவினர்களை நாம் தொடர்புகொள்ளக்கூடும். சட்ட மீறல்கள் இடம்பெற்றிருப்பதாக நாம் கருதினால் நாம் காவல்துறையினருடன் பேசுவோம். பிள்ளையின் பாதுகாப்பை மேற்கொள்ள உதவும் வகையில் ஆதரவு வழங்கக்கூடிய சேவைகளுடன் நாம் பிள்ளையின் குடும்பத்தைத் தொடர்புபடுத்தி வைப்போம்.

ஒரு பிள்ளை அல்லது ஒரு இளம்பிராயத்தவர் தீங்கிழைக்கப்படக்கூடிய ஆபத்தில் இருப்பின், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக நாம் பல்வேறு முகவர்களுடனும், இத்துறை வல்லுநர்களுடனும் இணைந்து செயற்படுவோம். பிள்ளை உடனடியான ஆபத்தில் இருப்பதாக நாம் கருதினால், நாம் அவர்கள் வாழ்வதற்கான ஒரு பாதுகாப்பான இடத்தை அளிப்போம். பிள்ளை அல்லது இளம் சிறார், குடும்பம் ஆகியோரை முடியுமான அளவுக்கு ஈடுபடுத்தியே அவர்களைப் பற்றிய தீர்மானங்களை மேற்கொள்வோம்.



# ஒரு பிள்ளை புறக்கணிக்கப்பட்டுள்ளதை அல்லது துஷ்பிரயோகிக்கப்பட்டுள்ளதை நான் எவ்வாறு அறிந்து கொள்வது?

ஒவ்வொரு வகையான சிறுவர் துஷ்பிரயோகத்திற்கும் அல்லது புறக்கணிப்புக்கும் உரிய பொதுவான உடல்ரீதியான மற்றும் நடத்தை சார்ந்த அடையாளங்கள் உள்ளன. (இவை தொடரும் பக்கங்களில பட்டியல்படுத்தப்பட்டுள்ளன).

இவற்றில் ஒரு அடையாளம் இருக்கின்றமை, புறக்கணிப்பு அல்லது துஷ்பிரயோகம் இடம்பெறுவதைக் காட்டுகிறது என்பது கருத்தல்ல.

ஒரு பிள்ளை புறக்கணிப்புக்கு அல்லது துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டுள்ளதா என்பதை கண்டறிய முனையும்போது, அப்பிள்ளையின் வாழ்க்கைச் சூழ்நிலைகளையும் கவனத்தில் கொள்வது அவசியமாகும். உதாரணமாக:

- பிள்ளையின் அல்லது குடும்பத்தின் சமூக அல்லது புவியியல் ரீதியான தனிமைப்படுத்தப்பட்ட தன்மை. தூரத்து உறவினர்களை அணுகுவதற்கான வழியின்மையும் இதில் அடங்கும்
- சகோதர சகோதரியின் துஷ்பிரயோகம் அல்லது புறக்கணிப்பு
- வீட்டு வன்முறை உட்பட, குடும்பத்தின் வன்முறை வரலாறு
- பிள்ளைக்கு பராமரிப்பு வழங்கக்கூடிய ஆற்றலைப் பாதிக்கக்கூடிய பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் உடல்நிலை அல்லது மனநிலை எனபன
- பிள்ளைக்கு பராமரிப்பு வழங்கக்கூடிய ஆற்றலை பாதிக்கச் செய்யக்கூடிய பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் மதுப்பாவனை அல்லது போதைப் பொருட்கள் பாவனை.

**உங்களுக்குத் தெரிந்த ஒரு பிள்ளையிடம் அல்லது உங்கள் சொந்தப் பிள்ளையிடம் துஷ்பிரயோகம் அல்லது புறக்கணிப்பு என்பவற்றிற்கான அடையாளங்களை நீங்கள் கண்டுகொண்டால், உடனடியாக DoCS இன் உதவி இணைப்பை 132 111 இல் தொடர்புகொள்ளுங்கள்.**



# புறக்கணிப்பைக் காட்டக்கூடுமான அடையாளங்கள்

## பிள்ளைகளில் இதற்கான அடையாளங்கள்

- மோசமான உடற்சுகாதாரம், உதாரணமாக தொடார்ச்சியாக பிள்ளையைக் கழுவி சுத்தம் செய்யாதிருத்தல்
- குப்பைக்கூளங்களைக் கிண்டுதல், அல்லது உணவைத் திருடுதல்
- அதிகமான நேரம் பாடசாலையில், பொது இடங்களில், ஏனைய வீடுகளில் தங்கியிருத்தல்
- மூத்தோரின் அன்பைப் பெற பேராவலோடு இருத்தல்
- வயதுக்கேற்ற இடையின்மை.
- சிகிச்சையளிக்கப்படாத உடலியல் பிரச்சினைகள், உதாரணமாக சீழ்ப்புண்கள், நப்பியால் ஏற்படும் தோல் வெடிப்புஇ அல்லது சிறுநீரால் வெந்த புண்
- குலுக்குதல், உறிஞ்சுதல், தலையை மோதிக்கொள்ளல்
- கைவிடப்பட்ட நிலையில் உள்ளதால் ஏற்படும் ஏக்கம்
- உடல் வளர்ச்சியும், விருத்தியும் குன்றியிருத்தல்
- அடிப்படை வாழ்க்கைப் பிழைப்பிலேயே முக்கிய கவனம்
- ஏழ்மையான அல்லது வெளிறிய உடற்தோற்றமும், நேர்த்தியற்ற தலைமயிர் அமைப்பும்.

## பெற்றோரில் அல்லது பாதுகாவலரில் இதற்கான அடையாளங்கள்

- போதிய உணவு, தங்குமிடம், உடை, மருத்துவ தேவைகள் என்பவற்றை வழங்காமையும், சுத்தமான வீட்டுச் சூழலைப் பேணாமையும்
- உரிய மேற்பார்வையற்ற நிலையில் பிள்ளையை விட்டுச் செல்லல்
- பிள்ளைக்குரிய உணர்வுபூர்வமான தேவைகளை வழங்க முடியாமை
- பிள்ளையைக் கைவிட்டுவிடுதல்
- அரவணைப்பையோ ஊக்கப்படுத்தலையோ நீண்டகாலமாகத் தவிர்த்திருத்தல்
- உளரீதியான பராமரிப்பை வழங்கத் தவறுதல்
- ஏனைய உடன்பிறப்புகளிலிருந்து ஒரு பிள்ளையை மாத்திரம் வேறுபடுத்தி நோக்குதல்.



# ஊடல் ரீதியான துஷ்பிரயோகத்தைக் காட்டக்கூடிய அடையாளங்கள்

## பிள்ளைகளில் இதற்கான அடையாளங்கள்

- முகம், தலை மற்றும் கழுத்தில் ஊமைக்காயம்
- மிதமிஞ்சிய ஒழுக்காற்று நடவடிக்கையால் ஏற்பட்ட சிராய்ப்பு மற்றும் வீக்கம்
- காயத்திற்கும், அதற்கான காரணம் பற்றி பிள்ளை கொடுத்த விளக்கத்திற்கும் இடையே முரண்பாடிருத்தல்
- அரைப் பட்டியினுடைய கொழுக்கி, கையச்சு போன்ற காயமேற்படுத்திய பொருளின் அமைப்பைக் காட்டக்கூடிய சிராய்ப்பு மற்றும் அடையாளங்கள்
- கடித்ததற்கான அடையாளங்களும், பிராண்டல்களும்
- பாரிய உடல்நலக் குறைவு நிகழ்ந்திராதபோதும், உடல் உள்ளுறுப்புகள் சிதைந்திருத்தல்
- எழும்புகளில் முறிவு, விசேடமாக மூன்று வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளில்
- எரிகாயங்களும், சூட்டுக்காயங்களும்
- பிள்ளை குலுக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படக்கூடிய வகையில் தலை சுற்றல், வாந்தி, வலிப்பு அல்லது விழித்திரையில் இரத்தக்கசிவு போன்ற அடையாளங்களுடன் கூடிய தலைக்காயங்கள்
- ஒன்றுக்கு மேற்பட்ட காயங்கள் அல்லது சிராய்ப்புகள்
- மதுபானம் அல்லது கேடு விளைவிக்கக்கூடிய போதைப்பொருட்கள் மற்றும் நச்சுத்தன்மை வாய்ந்த பதார்த்தங்களை விழுங்குதல்
- மூட்டு விலகல்கள், மூட்டுக் காயம், திருகுதல்
- பெண் பாலுறுப்பு சிதைக்கப்பட்டதைக் காட்டக்கூடிய பொதுவான அறிகுறிகளான, ஒவ்வாத நடவடிக்கையை மேற்கொள்ளல், மலசலம் கழிப்பதில் சிரமம், பிள்ளை ஏற்கனவே ஆர்வம் காட்டிய உடற்செயற்பாடுகளில் அல்லது விளையாட்டில் ஈடுபடத் தயக்கம் காட்டல் போன்றன.

## பெற்றோரில் அல்லது பாதுகாவலரில் இதற்கான அடையாளங்கள்

- பிள்ளைக்கு காயமேற்படுத்தி இருப்பதாக தாம் அஞ்சுவதாக பெற்றோர் அல்லது பாதுகாவலர் நேரடியாக ஏற்றுக்கொள்ளல்
- குடும்பத்தின் வன்முறை வரலாறு
- அவர்கள் பிள்ளைகளாக இருந்தபோது கொடுமைப்படுத்தப் பட்டதற்கான வரலாறு
- விளக்கப்படாத அல்லது சந்தேகத்திற்கிடமான காயங்கள், உணவு வகைகள் அல்லாத பதார்த்தங்களை விழுங்குதல் அல்லது வேறு உடல் கோளாறுகள் என்பவற்றிற்காக அடிக்கடி தமது பிள்ளையை அல்லது பிள்ளைகளை சுகாதார அல்லது மற்றும் சேவைகளிடம் அழைத்துச் செல்லல்.



# உணர்ச்சிரீதியான துஷ்பிரயோகத்தைக் காட்டக்கூடிய அடையாளங்கள்

சகலவிதமான துஷ்பிரயோகங்களும் பிள்ளைகளை உளவியல் ரீதியாகப் பாதிக்கின்றன. ஆனால் "உணர்ச்சிரீதியான துஷ்பிரயோகம்" என்பது பிள்ளையின் நம்பிக்கையை சீர்குழைக்கக்கூடிய நடத்தையைக் குறிக்கும்.

## பிள்ளைகளில் இதற்கான அடையாளங்கள்

- தாமும் தமது வாழ்வும் எவ்விதப் பயனுமற்றவை என்ற உணர்வு
- மற்றவர்களை மதிப்பீடு செய்ய இயலாமை
- மக்களில் நம்பிக்கையற்றிருத்தல்
- நாளாந்த வாழ்க்கைக்கு தேவையான பொதுசன ஆற்றல்கள் இல்லாமை
- தீவிர கவனம் தேடும் நடத்தை
- வேறு நடத்தை சார்ந்த முறைகேடுகள், உதாரணமாக அச்சுறுத்திக் கொடுமைப்படுத்தல், குழப்பமுண்டாக்குதல், மூர்க்கத்தனம்
- வீட்டு வன்முறைக்கு உட்படல்.

## பெற்றோரில் அல்லது பாதுகாவலரில் இதற்கான அடையாளங்கள்

- அடிக்கடி பிள்ளையில் குறைகாணல், சிறுமைப்படுத்தல், கேலிசெய்தல் அல்லது அலட்சியம் செய்தல் அல்லது கவனம் செலுத்தாமலும், பாராட்டாமலும் இருத்தல்
- மிகையான அல்லது நியாயமற்ற வேண்டுகோள்கள்
- பிடிவாதமான பகைமை, கடுமையான வார்த்தை துஷ்பிரயோகம், பயனற்றதென உதறித் தள்ளுதல், பலிகடாவாக்குதல்
- குறிப்பிட்ட ஒரு பிள்ளை மோசமானது அல்லது கேடு நிறைந்தது என்ற நம்பிக்கை
- பொறுத்தமற்ற உடல் ரீதியான அல்லது சமூக ரீதியான தனிமைப்படுத்தலை தண்டணையாக உபயோகித்தல்
- வீட்டு வன்முறை.



# பாலியல் துஷ்பிரயோகத்தைக் காட்டக்கூடிய அடையாளங்கள்

## பிள்ளைகளில் இதற்கான அடையாளங்கள்

- பாலியல் செயற்பாட்டை விவரித்தல், உதாரணமாக "சிறுநீர் கழிக்கும்போது எனது ________ வலிக்கிறது"
- அதைப்பற்றி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உங்களிடம் சொல்லுதல்
- தன்னை அழித்துக்கொள்ளும் நடத்தை, உதாரணமாக போதைப் பொருளை நம்பியிருத்தல், தற்கொலை முயற்சிகள், தன்னை சிதைத்துக்கொள்ளல்
- முழுமையாக உடையணிந்த நிலையில் படுக்கைக்குச் செல்லல்
- சஞ்சலமடைந்த நிலை அல்லது மிகையாக உணவு உட்கொள்ளல்
- பாலுறுப்பில் இரத்தக்கசிவு அல்லது காயம்
- பாலியலால் பரப்பப்பட்ட நோய்கள்
- மார்பகம், புட்டம், அடி வயிறு அல்லது தொடைகளில் காயம்
- இளம் பருவத்தில் கர்ப்பம்
- அறியப்பட்ட அல்லது சந்தேகிக்கப்பட்ட ஒரு பாலியல் தாக்குதல் குற்றவாளியுடன் தொடர்புகொள்ளல்
- விபரமற்ற விதத்தில் சேர்ந்துள்ள பணம் மற்றும் பரிசுப் பொருட்கள்
- அடிக்கடி வீட்டிலிருந்து ஓடிப்போதல்
- பின்னோக்கிச் செல்லும் நடத்தை, உதாரணமாக திடீரென மீண்டும் படுக்கையில் சிறுநீர் கழிக்கக்கூடிய அல்லது அழுக்காக்கும் நிலைக்குச் செல்லல்
- பிள்ளையின் வயதுக்குப் பொருத்தமற்ற பாலியல் செயற்பாடு.

## பெற்றோரில் அல்லது பாதுகாவலரில் இதற்கான அடையாளங்கள்

- பிள்ளையை விபச்சாரத்திற்கு அல்லது ஆபாசத்திற்கு உட்படுத்துதல் அல்லது பிள்ளையை ஆபாச நோக்கங்களுக்காகப் பயன்படுத்தல்
- மற்றவர்களின் பாலியல் செயற்பாடுகளை பிள்ளைக்கு வேண்டுமென்றே காணவைத்தல்
- சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்காக ஏற்கனவே குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டிருத்தல்
- மற்றச் சிறுவர்களுடன் பாலியல் செயற்பாட்டில் ஈடுபட நிர்ப்பந்தித்தல்
- பாலியல் துஷ்பிரயோகம் பற்றி வார்த்தைகளால் மிரட்டுதல்
- இளம் பருவத்துப் பிள்ளையின் கர்ப்பம் பற்றி குடும்பத்தினர் மறுத்தல்.